## பலே பாலூர் காய்கறி விதைகளுக்கென்றே ஓர் ஆராய்ச்சி நிலையம்!

10.07.2013





வீரிய விதைகள் என்கிற பெயரில் விவசாயிகளின் பணத்தை பன்னாட்டு நிறுவனங்கள் பலவும் தொடர்ந்து பறித்துக் கொண்டிருகின்றன. இத்தகையச் சூழ்நிலையில், அதிக விளைச்சலைக் கொடுக்கக் கூடிய காய்கறி விதைகளை உள்ளூரிலேயே உருவாக்கி... விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் கொடுத்துக் கொண்டிருக்கிறது, கடலூர் மாவட்டம், பண்ருட்டி அருகேயுள்ள பாலூர் காய்கறிகள் ஆராய்ச்சி நிலையம்.
இந்த நிலையத்தின் செயல்பாடுகள் பற்றி பெருமையோடு பேசிய அதன் பேராசிரியர் மற்றும் தலைவர் கலைமணி, அந்த நிலையம் மூலமாக வெளியிடப்பட்டுள்ள காய்கறி ரகங்களைப் பற்றியும் விவரித்தார்.

**பூச்சி, நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட கத்திரி!**

“எங்கள் ஆராய்ச்சி நிலையத்தில் வெண்டை, கத்திரி, தக்காளி, கீரை, பீர்க்கன், சுரைக்காய், சாம்பல் பூசணி போன்ற பல்வேறு காய்கறி ரகங்கள் பற்றிய ஆராய்ச்சி மற்றும் விதை உற்பத்தி நடந்து வருகிறது.
கத்திரியில் பி.எல்.ஆர் 1 மற்றும் பி.எல்.ஆர்.2 என இரண்டு ரகங்களை வெளியிட்டுள்ளோம். இந்த ரகங்கள் அனைத்துப் பட்டங்களுக்கும் ஏற்றவை. இவற்றின் வயது 150 நாட்கள் முதல் 180 நாட்கள். இவை, அதிகமான சுவை மற்றும் பூச்சி, நோய் எதிர்ப்புத் திறன் கொண்டவை. ஒரு ஹெக்டேருக்கு 25 டன் முதல் 40 டன் வரை மகசூல் கொடுக்கக் கூடியவை.

**வீட்டுத் தோட்ட மிளகாய்!**

பி.எல்.ஆர்1 என்ற மிளகாய் ரகம், கடலோர உவர் நிலத்திலும், செழித்து வளரும் தன்மை உடையது. மார்கழிப் பட்டத்துக்கு ஏற்ற இந்த ரகத்தை வீட்டுத் தோட்டத்திலும் பயிர் செய்யலாம். ஒரு ஹெக்டேருக்கு 18 டன் அளவுக்கு மகசூல் கொடுக்கக் கூடிய இந்த ரகத்தின் வயது 210 முதல் 240 நாட்கள்.

**கல் கட்டத் தேவையில்லாத புடலை!**

பி.எல்.ஆர் 1 (அரியாங்குப்பம்) என்ற புடலை ரகம் நல்ல சுவை கொண்டது. இதில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் குறைவாக இருக்கும். ஒவ்வொரு காயும் சுமார் ஒன்றரை கிலோ அளவிற்கு இருப்பதால், காய்கள் நீண்டு வளர்வதற்காக அவற்றின் முனையில் கல் கட்டத் தேவையில்லை. இதில், ஒரு ஹெக்டேருக்கு35 டன் முதல் 40 டன் வரை மகசூல் கிடைக்கும். பி.எல்.ஆர்.2 என்ற குட்டைப் புடலை (சாத்திப்பட்டு) ரகம் சுவையானதோடு விற்பனை மற்றும் போக்குவரத்துக்கு வசதியானது. இந்த ரகம் அனைத்துப் பட்டங்களுக்கும் ஏற்றது. ஒவ்வொரு காயும் 550 கிராம் முதல் 600 கிராம் வரை எடை இருக்கும். ஒரு ஹெக்டேரில் 35 டன் வரை மகசூல் கிடைக்கும். இதன் வயது 135 நாட்கள் முதல் 140 நாட்கள்.

**பூச்சித் தாக்காத கீரை!**

பி.எல்.ஆர்-1 என்ற கீரை ரகம் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. இந்த ரகத்தின் வயது 25 நாட்கள். இது, அனைத்துப் பட்டங்களுக்கும் ஏற்றது. இலையைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் துரு நோய் ஆகியவற்றிற்கான எதிர்ப்பு சக்தியைக் கொண்டது. ஒரு ஏக்கரில், 3 ஆயிரத்து 500 கிலோ அளவுக்கு மகசூல் கிடைக்கும். இப்படி இன்னும் பல விதைகளும் எங்களிடம் உள்ளன. தேவைப்படுவோர், எங்களுடைய ஆராய்ச்சி மையத்தை தொடர்பு கொள்ளலாம் என்றார் கலைமணி.

**36 நாட்டுக் காய்கறி ரகங்கள்!**

விதைகள் என்றாலே பெரும்பாலும் நெல் விதை பற்றிதான் பேசப்படுகிறது. காய்கறி உள்ளிட்ட பிற பயிர்களுக்கான விதைகள் பற்றிய பேச்சே பெரிய அளவில் இல்லாமல்தான் இருக்கிறது. சொல்லப் போனால், இந்த காய்கறி ரகங்களின் விதைகளை விவசாயிகளே பராமரிப்பது என்பது சுத்தமாகவே அற்றுப் போய்விட்டது. இந்நிலையிலும் பாரம்பரிய காய்கறி ரகங்களின் விதைகளை சேமித்து தொடர்ந்து விற்பனை செய்த வருகிறார்… திருச்சி மாவட்டம், முசிறியைச் சேர்ந்த யோகநாதன்.

“தமிழ்நாடு முழுவதும் கடந்த சில ஆண்டுகளில் கிடைத்த 36 வகையான பாரம்பரிய காய்கறி விதைகளை சேகரித்து, அவற்றை தெரிந்த விவசாயிகளுக்கு கொடுத்து, விதை உற்பத்தி செய்து, விற்பனை செய்து வருகிறேன். பொன்னிக் கத்திரி, பச்சைக் கத்திரி, வெள்ளைக் கத்திரி, பாளையம் கத்திரி, முள் கத்திரி என்று நாட்டு ரகங்களில் அறு ரகங்கள் என்னிடம் உள்ளன. இந்த ரகங்கள் அனைத்துமே ஓராண்டு வயதுடையவை. இவை, ஏக்கருக்கு 5 டன் அளவுக்கு மகசூல் கொடுக்கக் கூடியவை. நாட்டுத் தக்காளி 4 மாதம் வயது கொண்டது. இது ஏக்கருக்கு 2 டன் அளவுக்கு மகசூல் கொடுக்கும்.

**நிலத்திலே படரும் மிதிப்பாகல்**

மிதிப் பாகல், நெட்டை, குட்டைப் பாகல் என மூன்று பாகல் ரகங்களும், நெட்டைப் புடலை, குட்டைப் புடலை என இரண்டு ரகங்களும் உள்ளன. இதில் மிதிப் பாகல் மட்டும் 4 மாதம் வயது கொண்டது. மீதி அனைத்தும், 6 மாதம் வயது கொண்டவை. மிதிப் பாகல் தரையிலே படரும் தன்மை கொண்டது. மீதியுள்ள அனைத்து ரகங்களுக்கும் பந்தல் அமைக்க வேண்டும். அனைத்து ரகங்களுமே 2 டன் முதல் 4 டன் அளவுக்கு மகசூல் கொடுக்கக் கூடியவை.

பச்சை வெண்டை, வெள்ளை, சிகப்பு என மூன்று வெண்டை ரகங்கள் உள்ளன. இவற்றில் பச்சை வெண்டை 4 மாதம் வயது கொண்டது. ஏக்கருக்கு இரண்டு டன் அளவுக்கு மகசூல் கிடைக்கும். மற்ற இரண்டு ரகங்கள், 6 மாத வயது கொண்டவை. ஏக்கருக்கு 4 டன் அளவுக்கு மகசூல் கொடுக்கக் கூடியவை.

மேலும், சிறுகீரை. முளைக்கீரை, பாலக்கீரை போன்ற கீரை ரகங்கள்; 4 மாதம் வயது கொண்ட பீர்க்கன்; 6 மாதம் வயது கொண்ட கொத்தவரை, கொடி அவரை, பரங்கி, பூசணி ஆகியவற்றின் விதைகளும் என்னிடம் உள்ளன என்றார்.

தொடர்புக்கு பேராசிரியர்மற்றும் தலைவர்
காய்கறி ஆராய்ச்சி நிலையம், பாலூர், கடலூர்(மா).
தொலைபேசி: 0414 -2212538
யோகநாதன், செல்போன் : 94428 16863

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 10.07.13** www.vikatan.com